உ

கடவுள்துணை

---

# விநோத

# ஜாலக்கண்ணாடி.

## முதற்பாகம்.

---

இவை - சிறுமணவூர்

முனிசாமிமுதலியாராலியற்றப்பட்டு

இவை ௰ பாகம்வரையில்

அச்சிட்டிருக்கிறது

ஒரேகட்டடமாகவும்

பயிண்டு செய்யப்படும்

ஆதிபுரி

இரத்தினவேலுமுதலியாரது

வாணீவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது,

1896.

சோதியாம்வாட்டிலோடு தணையெடுத்து
சூழ்ந்திக்குஞ் சபையோருர்க்கு நன்றாய்க்காட்டு
நீதியாய் வந்தனங்கள் மிகவேசொல்லி
நில்லடி பகவதி காளியென்று
ஓதியே வாட்டில்தணைக் கடித்துப்பாரு
உண்மையடா அரிசிபோல் மெல்லலாமே,

✱காரம் என்பது அக்கராகாரத்தை ஒருசிறியதுண்டுவாயில் போட்டு நன்றாய் கசகசவென்று மென்று தாடையிலடைக்கிக் கொண்டு வாட்டிலோட்டைக் கடித்தால் அரிசிபோல் மசியும்வாய் அறுக்காது.

4 வது, கறைத்தமஞ்சள் எடுக்குஞ்ஜாலம்,

மஞ்சளதை மெழுகுபோ லரைத்துக்கொண்டு
மைந்தனே தண்ணீரில் கரைத்துநீதான்
அஞ்சாமல் சபைநடுவே வைத்துக்கேளு
அதற்கெதிரிநீர்முள்ளி விரைதானப்பா
கொஞ்சமது பொடிசெய்து நீரிற்றாவி
கொற்றவனே கலக்கியதை வழித்தையானால்
மஞ்சளது கரைத்வுண்டை வந்தேபோச்சு
மதிமயங்கி யாச்சரிய மென்பார்தானே,

(வ-ம்) மஞ்சள் அரைத்தவுண்டையை ஒரு பெர்கணியில் ஜலம்வார்த்து கரைத்துவிட்டு நீர்முள்ளிவிரையை தூளாய் நசிக்கி விபூதியில்கலந்துகொண்டு சல் மலையாளபகவதி ஓடிவாகறைத்தமஞ்சளைக் கொண்டுவாவென்று சொல்லிக்கொண்டே அந்தவிபூதியைபோட்டு வழித்தால் உருண்டையாய்வந்துவிடும்.

5 வது சங்கிலியுருவுஞ்ஜாலம்,

ஆச்சரிய மின்னமொரு ஜாலங்கேளு
அக்கினியில் சங்கிலியைக் காயப்போட்டு
கூச்சமில்லை கத்தாழை மடலின்சோற்றை
கொண்டுவந்து விளக்கெண்ணை தனிற்கல்ந்து
ஆச்சரியம் சங்கிலியை கயற்றால் தூக்கி
அப்பனே வலதுகையா லெண்ணைவாரி
ஈஸ்பரீ துணையென்றே யுருவினாக்கால்
எறியுமடா சங்கிலிதான் கைவேகாதே.

(வ-ம்,)கத்தாழைமடல்சோற்றை பில்லைபில்லையாக அறுத்து விளக்கெண்ணையில போட்டுவைத்து சங்கிலியை நன்றாய்க் காயவைத்துகயர்மாட்டி யிடதுகையில்தூக்கி வலதுகையில் கத்தாழை மடலோடு எண்ணெயைவாரி உருவினால் சங்கிலிகுப்பென்றெரியுங் கைசுடாது.

6-வது-காகிதத்தில் பணியாரஞ்சுடுஞ்ஜாலம்,

தேரிகின்ற பிரண்டைதனை யரைத்துக்கொண்டு
திடமான காகிதத்தால் தொன்னைசெய்து
மாரியேபின்புரத்தில் மூன்றுபூசல்
மைந்தனே யுலரவைத்துப் பூசிவாங்கி
கோரியே மூன்றுகல்லை யடுப்புபோலே
கூட்டியே தொன்னையதின் மேலேவைத்து
வாரப்பா எண்ணெயது காய்ந்தபின்பு,
வடைப்போளி யதிரசங்கள் சுட்டுவாங்கே,

(வ-ம்,,) திடத்த கடுதாசியை தொன்னைபோல்ஒட்டி தேறின பிரண்டையை அறைத்து பின்புறம் மூன்று பூசல்பூசி காய வைத்து மூன்றுசிறுகல்லை அடுப்பாய்வைத்து ஷ தொன்னையை யேந்தி யெண்ணெவார்த்து காய்ந்தபிறரு பலகாரஞ்சுடவும் ஆனா ல் பிரண்டையை அறைக்கும்போது கைவிரல்களுக்கு விளக்கெ ண்ணெ தடவாவிட்டால்எரியும்.

7-வது,ஜலத்தைகட்டுஞ் ஜாலம்.

வாங்கப்பா குசவனிடம் சென்றுநீதான்
வேகாத பச்சையென்ற தோண்டிதன்னை
வாங்கப்பா நருவிலியாம் பழத்தைவாங்கி
வண்மையாய் தோண்டியுள்ளே பூசுபூசு
தாங்கவே பூப்பூசல் பூசிக்காச்சி
தண்ணியதில் நிதிப்பியுக்கம் போட்டுத்தூக்கி
தாங்குகின்ற வோட்டையெல்லாந் தட்டிப்போடு
தண்ணியங்கே யந்திரமாய் நிற்கும்பாரே,

(-வம்) ஒருபச்சைத்தோண்டியின் உள்ளுக்கெல்லாம் நருவிலி ப் பழத்தைப் பிசைந்து மூன்றுதரம்பூசிக் காய்ந்தபிறகு தண்ணி யைநிறையவிட்டு உக்கம்போட்டுமேலே தூக்கிக் கட்டினபிறகுஓ ட்டையெல்லாந் தட்டிவிட்டால் அந்தரமாய் நிற்கும்.

8 வது, ஜலத்தை அல்வாசெய்யுஞ் ஜாலம்,

பாரப்பா ஜலக்கட்டு ஜாலந்தன்னில்.
பாடுகிறே னின்னமொரு ஜாலங்கேளு
நீரப்பா நல்லஜலங் குடத்திலமொண்டு
நினைவாகக் கட்டுகொடியென்றமூலி
சேரப்பா சர்க்கரையுந் தாக்கிக்கொண்டு
செண்டுபோ லாகுமடா நிமைநேரத்தில்
கூரப்பா சிலேசுபோ லறுத்துநீதான்
கொடுத்துவா சபையிலுள்ள பேர்க்குத்தானே,

வ-ம்) நல்லஜலத்தை குடத்தில்மொண்டு கட்டுக்கொடியென்கிறமூலிகையைத் துண்டுதுண்டாகத் தரித்துப்போட்டு சக்கரையுங்கொஞ்சம்போட்டுகலக்கி மூடிவைத்தால் சற்று நேரத்தில்அலுவாய்போல் பந்தனையாய்விடும் கத்தியினாலறுத்து அனைவருக்ுங்கொடுக்கலாம் இதை சாதாரணமாய் செய்துதின்றாலும் தாதுவிர்த்தியாகும்.

9-வ, சில்லிகுடத்தில் தண்ணினிற்குஞ் ஜாலம்.

தானென்ற யின்னமொரு ஜாலஞ்சொல்வேன்
 தயவாகத்தோண்டியொன்று வாங்கிநீதான்
கோனென்றஎழுத்தாணிக் கூறினாலே
 குத்தப்பாவுடம்பெல்லாஞ் சில்லியாக்கி
மானென்றநருவிலியும் துத்திரெண்டும்
 மைந்தனேயரைத்துமதி லுள்ளேபூசி
தானென்றஜலம்வார்த்து தூக்கிபாரு
 சலரையிலொருபொட்டு விழாதிருக்குஞ்சொன்னேன்,

(வ-ம்) ஒருகுடத்தை எழுத்தாணியால் சில்லிகள்செய்து துத்தியிலையும் நருவிலியிலையும் பழமுஞசேர்த்து ஒன்றிரண்டுமாயரைத்து உள்ளேபூசி சற்றுநேரம் பொருத்து ஜலம்வார்த்துத்தூக்கினால் ஒருதுளியுஞ்சிந்தாது,

10-வது, நீரில் விளக்கெரியுஞ் ஜாலம்,

சொன்னதே யத்திமரப் பால்தானப்பா
 துவட்டிநீதிரியாகத் திரித்துக்கொண்டு
நல்லசலம்கலசத்திற் காலாய்விட்டு
 நனையாமல்வத்தியின்கீழ் தடைதானிட்டு
மெல்லவேதீமூட்டி சபையிற்காட்டு
 மெய்த்தெய்வவருளென்பார்கள்தடைகட்டாதே
அல்லவேயின்னமொருவிதத்தைகேளு
 அம்முறையும் பலிக்குமடா வாண்பொரே,

(வ-ம்) அத்திமரத்தினுடையபாலை நல்விதமான சல்லாக்கந்தையில்துவட்டி திரியாகத்திரித்து கொஞ்சம் ஆழமான கலசத்தில் கால்பங்குஜலத்தைவிட்டு ஆனால் ஜலத்துக்குமேல் ஒரு யிழையுபரமான சிறுகல்லுகளாவதுபோட்டு வத்திநனையாதபக்குவமாய் வைத்துககொளுத்திக்காட்டினால் நம்புவார்கள் அதில்தடையுள்ள கலசமரகமேசெய்துவைத்துக்கொண்டால் முன்னேவத்தியைபோட்டு எல்லார்க்குமநடுவில்நின்று ஜலத்தைவிடலாம் வத்திநனையாமல் விடவேணும்,

11-வது, தீபங்காட்டுஞ் ஜாலம்.

ஆண்டுபார்குங்கிலியம் பொடித்துநீதான்
அப்பனேசீலையிலேபரப்பிச்சுத்தி
வேண்டிப்பார்வத்திபோல் திரித்துக்கொண்டு
விளக்கெண்ணெய்தனிற்றோய்த்து கலசத்திட்டு
தூண்டுவாய் ஜலம்வார்த்துத் தீயைமாட்டு
தொல்லுலகோர் தூர்க்கையுடவசியமென்பார்
வேண்டியேயின்னமொரு ஜலமுண்டு
விபரமாய்கேட்கவதை விளம்புவேனே.

(வ-ம்,) குங்கிலியமும் கற்பூரமும் பொடியாய்ச்செய்துநசிக்கி ஒருகந்தையில் பரப்பிதிரியாய்த்திரித்துவிளக்கெண்ணெயில்தோய்த்துவைத்துக்கொண்டு முன்போல் தடையுள்ளகலசத்தில் வத்திபோட்டுதடைக்கு ஒருயிழைகுரைவாகவே ஜலத்தைவிட்டுக் கொளுத்தி சபையில்வைத்தால இரண்டுநாழிகை எறியும் நிஜமாகவே நம்புவார்கள் சிலர்காளிவசியம் என்பார்கள்,

12-வது, தீபங்காட்டுஞ் ஜாலம்.

விளம்பவேதிருகுகள்ளிபாலைவாங்கி
விகசிதமாய்கர்பூரம் பாலிடையேசேர்த்து
குளம்பவேஇரண்டுமொன்று யரைத்துக்கொண்டு
குணமாகச்சீலையிலே துவட்டிக்காய்ச்சு
தளும்பவேகலசத்தில் ஜலத்தைக்கொட்டி
தடையிட்டுவத்தியிட்டு தீயைமாட்டு
கலங்கியேசபையோர்கள் பார்த்தசோதி
கண்கட்டுஜாலமென்பார் கபடாய்செய்யே,

(வ-ம்) திருகுகள்ளிபாலை கரண்டியளவெடுத்து கற்பூரம்அதேயளவெடுத்து இரண்டையுமரைத்து சீலையில்தடவியுலர்த்தி வத்தியாய்த்திரித்து தடையிருக்கும் கலசத்திற்போட்டுஜலத்தைவார்த்து விளக்கேத்திக்காட்டினால் ஆச்சரி[illegible]டுவார்கள்,

13-வது, குளத்திலிருந்து விபூதி[illegible]டுஞ் ஜாலம்

செய்யவேகொடிக்கள்ளி பால்தானப்பா
திருநீற்றைப்போல்குழைத்து முகத்திலிட்டு
உய்யவேபுஜங்கழுத்து மார்புதொந்தி
உடம்பெல்லாம்சிவயோகிபோலேபூசு

வெய்யிலிலேசற்றிருந்து சபையில்வந்தால்
வேற்றுடம்டாயிருக்குமடா ஒன்றுந்தோற்ரு
துய்யவேகுளக்கிணற்றில் மூழ்கிவந்தால்
துல்லிதமாயிருக்குமடா வுலருமட்டும்

(வ-ம்) கொடிக்கள்ளிபாலை விபூதிபோல்குழைத்து சிவயோகிபோல்திரேகமுழுவதும் கட்டுகட்டாயிட்டு வெய்யிலில்நின்ருல் உலர்தபிறகு ஒனறுந்தெரியாது அனைவருக்குங்காட்டி பிறகு ஒருகுடம் ஜலத்தைசிரசில்ஊற்றினுல்உடனேபளிச்சென்றுயோகியைப்போல் இருக்கும் பார்தவர்களெல்லாம் ஆச்சரியமாய் பிரமிப்பார்கள்.

I4-வது, மணலைமெல்லுஞ் ஜாலம்

இருக்குமடாவின்னமொருஜாலங்கேளு
எவ்வளவோசூக்ஷமதி லாச்சரியம்பார்
கருத்தகுறிக்குண்டுமணி யிலைதானப்பா
கண்மணியே தாடையிலே மென்றடக்கி
பிரிதொன்றுமில்லையடா வாற்றிலுள்ள
பெருமணலோ சிறுமணலோ வெதுவானுலும்
வருத்தமில்லை சக்கரைபோல் தின்னலாகும்
வளமாகச் செய்திட்டால் வணங்குவாரே.

(வ-ம்) குண்டுமணியிலையை மென்றுதாடையில்அடக்கிக்கொண்டு மணலை மென்றுதின்ருல் எவ்வளவானுலும்சலிப்பில்லாமல்தின்னலாகும்,

15-வது. புட்டியிலேமுட்டைவிடும்வித்தை.

புட்டியிலே கோழிமுட்டைவிட்டிருந்தால்
பார்ப்பவர்க்கு ஆச்சரியந்தானே அப்பா
முட்டைதன்னைச் சீமையுடக்காடிதன்னில்
மூன்றுநாளூறவைத்து யெடுத்துக்கொண்டு
புட்டியிலேவிட்டாக்கல் துவண்டுப்போகும்
போனபின்புதன்னுருவம் பூண்டுக்கொள்ளும்
இட்டமுடன் முனிசாமியெழுதிவைத்தான்
யென்னபிழைவந்தாலும் யேற்பீரையா.

முதற்பாகம்-முற்றிற்று

——(*)——